மீதியை அரசாங்கமே போட்டுக்கொள்வது, இரண்டையும் சேர்த்து கடன் வாங்குவது என்ற முறையில் விதிகளை அமைத்து கூட்டுறவுத் துறையை வலுப்படுத்த அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கூட்டுறவுத் துறை என்று சொல்லிவிட்டு பங்குகள் சேர்க்காமல் இருந்தால் அது என்ன கூட்டுறவு என்று தெரியவில்லை. சர்க்காரே போட்டு செய்வதாக இருந்தால், சர்க்கார் துறையிலேயே மில் வைத்து விடுகிறோர்கள். அதற்கு கூட்டுறவுத் துறை என்று இருக்கவேண்டாம்.

திரு. வி. எஸ். எஸ். மணி: ஸார், ஏராளமாக நூல் ஆலைகளை ஏற்படுத்தி அதிகமாக நூலை நாம் சேர்த்து வைத்து அதனால் ஏராளமாக ஸ்டாக் நின்றுவிட்டால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய என்னென்ன வழிகள் கையாளப்பட்டு வருகின்றன? தாராளமாக எக்ஸ்போர்ட் செய்ய வழி முறைகளை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எக்ஸ்போர்ட்டுக்கு கோட்டா தேவையில்லை. யார் வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் ஏற்றுமதி செய்யலாம். இன்றைக்கு நாட்டில் இருக்கும் நிலைமை நூல் பற்றாக்குறை தான். இந்தப் பிரச்னை எழுவேயில்லை.

திரு. கரு. சிமைச்சாமி: கூட்டுறவு முறையில் ஷேர் காப்பிட்டல் சேர்க்க முடியவில்லையென்றால் தனியார் துறையில் யாராவது மனுச் செய்தால் அவர்களுக்குச் சலுகை காட்ட முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எல்லா ஜில்லாவிற்கும் நாங்கள் ஒவ்வொரு கூட்டுறவு மில் கொடுத்தாகி விட்டது. மேற்கொண்டு அவர்கள் கூட்டுறவுத் துறையில் பங்கு சேர்த்தால் அதையும் கவனிக்கத் தயாராக இருக்கிறோம்.

Post-Graduate Course in Dental Surgery

* 45 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to start Post-Graduate Dental Education Course with the assistance of the Central Government?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

அரசாங்க போக்குவரத்து பஸ்கள்

* 46 கேள்வி—திரு. எம். எஸ். மணி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்க பஸ்களில் தினசரி மொத்த வசூலாகும் தொகைக்கும் தினசரி டிக்கட் விற்பனை ஆகும் தொகைக்கும் வித்தியாசம் இருக்கிறதென்பது உண்மையா?